செய்து, அவை சரிவர செயல்படவில்லை என்ற ஒரு மதிப்பீடு செய்யப்பட்டு, மேற்கண்ட பூங்கா அமைவதற்கான பணிகள் தொடர இயலாத சூழ்நிலை உள்ளது. இப்பூங்கா திரும்பவும் செயல்படுவது தொடர்பாக மத்திய அரசின் திட்டக் குழு மறு ஆய்வு செய்து முடிவு செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட கப்புலாபுரம் கிராமத்தில் புதியதாக விசைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன்பேரில், மீண்டும் மறு ஆய்வு செய்து, தொழில்முனைவோர்கள் எவரேனும் முன்வரக்கூடிய நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

சமுதாயக் கூடம்

***26851—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், குராயூர், முனியாண்டிபுரம், வில்லூர் ஆகிய கிராமங்களில் நாட்கோ மூலம் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், வில்லூர் கிராமத்திற்கு 2013-2014 ஆம் ஆண்டில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அது கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குராயூர் மற்றும் முனியாண்டிபுரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருப்பின், விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப சமுதாயக் கூடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்று புதிய இலக்கியத் தத்துவத்தை உருவாக்கி, இந்தியாவில் அமைந்திருக்கக்கூடிய அரசாங்கம் தமிழகத்தைப் புறக்கணித்து எந்தவொரு செயலையும் செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கி, தமிழக மக்கள்மீதும், தமிழகத்தின்மீதும் மிகுந்த அக்கறையும், பாசமும் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், வில்லூர் கிராமங்களைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்ட இந்த வேளையில், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அதே ஒன்றியத்திலுள்ள, குராயூர் கிழக்குத் தெரு என்பது அதிக அளவில் ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதி. முனியாண்டிபுரம் என்பது தனி ஊராட்சி. முழுமையாக ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதி. கல்யாணம் மற்றும் காதணி விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அந்த மக்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த நிதி ஆண்டிலேயே அந்த இரண்டு கிராமங்களுக்கும் சமுதாயக் கூடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குராயூர் கிராமத்தில் 300 ஆதி திராவிடர் குடும்பங்களும், முனியாண்டிபுரம் கிராமத்தில் 250 ஆதி திராவிடர் குடும்பங்களும் வசித்து வருகின்றன. எனவே, நிதிநிலைக்கேற்ப, சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இருப்பின், விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்து, ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராகத் திகழும், தமிழக மக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காண்டையிலே சமுதாயக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியையும் விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மக்கள் தொகையிலே, ஐந்தில் ஒரு பங்காக இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள் 70 சதவிகிதம் பேர் கிராமப்புறங்களில்தான் வசித்து வருகிறார்கள். அதிலும்கூட, ஆதி திராவிட மக்களின் வசிப்புத் தன்மை இருக்கின்றதே, பொதுவாகவே கூட்டம் கூட்டமாக, அணி அணியாக, ஒரே இடத்தில் வசித்து வருகிற அந்தச் சூழலை நாம் நீண்ட காலமாகப் பார்க்க முடியும்.*

இப்போது வளர்ந்துவரும் மக்கள் நெருக்கடிக்கேற்ப, பொது இடங்கள் குறைந்து வருகிற அந்தச் சூழலைக் கருத்திலேகொண்டு, எங்கெல்லாம் 500 ஆதி திராவிட குடும்பங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம், அந்த மக்கள் மங்கல நிகழ்வுகள், திருமணம், சடங்குகள் போன்றவற்றையெல்லாம் நடத்துவதற்கு உறுதியான ஒரு சமுதாயக் கூடம், உருவாக்குவதற்கு அரசு முன்வருமா! அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழனாக, தலித் மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்

கொண்டிருக்கக்கூடிய நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலாவது 500 ஆதி திராவிட குடும்பங்கள் வாழும் பகுதிகளிலே இந்தச் சமூகக் கூடங்களைக் கட்டாயம் உருவாக்கினால், அவர்களுடைய தேவை நிவர்த்தியாகும். அதேநேரத்தில் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று திருமண நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்கிறபோது, வருகிற சச்சரவுகளும், சமூக மாறுபாடுகளும் குறையும். ஆகவே, அதை ஒரு மரபாக, முன்னுரிமையாக வருங்காலங்களிலே உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து இம்மாதிரியான கோரிக்கைகள் அரசுக்கு நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இப்பொருள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

மணிமண்டபம்

***42350—திரு. கடம்பூர் ராஜு :**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—